**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.32/2024**
**Prosecution Witness**:PW3

| Name | சிவகாமி (PW3) | Caste | |
|---|---|---|---|
| Husband's Name | சண்முகசுந்தரம் | Calling | |
| Village | அவிநாசி | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

கடந்த 13.03.2023 ம் தேதி அன்று என் மூத்த சகோதரர் சுப்ரமணியம் ரோட்டை கடக்கும்போது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். மணிகண்டன் போன் மூலமாக விபத்து நடந்தது பற்றி தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு வரும்போது ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டதாக சொன்னார்கள். நான் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவிநாசி அரசு மருத்துவமனையில் இருந்து என் சகோதரரை மேல் சிகிச்சைக்காக ரேவதி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். ரேவதி மருத்துவமனையில் இருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். என் சகோதரர் அங்கு நான்கு நாட்கள் சிகிச்சையில் இருந்து சிகிச்சை பலனின்றி கோவை அரசு மருத்துவமனையில் காலமாகிவிட்டார். விபத்து சம்பந்தமாக இளைய சகோதரர் புகார் கொடுத்தார். போலீசார் விசாரணை செய்த போது நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்ன சாட்சியைத் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன்.போலீசார் என்னை ஒரு முறை தான் விசாரித்தனர். நான் விபத்து நடந்த இடத்திற்கு செல்லும் போது என் சகோதரரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டார்கள். போலீசார் என்னை ஹாஸ்பிடலில் வைத்து விசாரித்தனர் என்னுடன் என் சகோதரர் என் சகோதரனின் மகன் என் மகன் உடன் இருந்தார்கள்.என்னுடன் இருந்த மற்ற நபர்களை போலீசார் விசாரித்தார்களா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி அவர்களை தவிர போலீசார் விசாரணை செய்த போது வேறு யாரும் என்னுடன் இல்லை. என் சகோதரர் இறந்ததற்கு நானும் என் மற்றொரு சகோதரரும்

நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நஷ்ட ஈடு வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள மணிகண்டன் எனக்கு உறவினர் இல்லை என் சகோதரருடன் பணி புரிபவர்.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.N.Keerthana)<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |